**செய்தி வெளியீடு எண்: 668** **நாள்: 09.10.2017**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையில் இன்று (9.10.2017) அனைத்து அரசுத் துறை உயர் அலுவலர்களுடன் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையக் கூட்டம் நடைபெற்றது.**

இந்தக் கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

1. வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பே அனைத்து துறை அலுவலர்களும் ஆயத்தப் பணிகளை முழுமூச்சுடன் செயல்படுத்திட வேண்டும்.

2. கடலோர பேரிடர் அபாய குறைப்புத் திட்டத்தின் கீழ் கடலோர மாவட்டங்களில் பொதுப்பணித்துறையின் மூலம் ரூ.345 கோடி செலவில் 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் கட்டப்பட்டு, இதில் 115 பல்நோக்கு பாதுகாப்பு மையங்களில் பேரிடர் காலங்களில் பாதிக்கப்படும் மக்களை தங்க வைக்க தயார் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. எஞ்சியுள்ள 6 பல்நோக்கு பாதுகாப்பு மையங்களை விரைவில் கட்டிமுடித்து தயார் நிலையில் வைக்க வேண்டும்.

3. பேரிடர் காலங்களில் ஏற்படும் அபாயத்தை குறைக்கும் வகையில், பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய பகுதிகள் என கண்டறியப்பட்ட பகுதிகளில் பேரிடர் தடுப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பணிகளை நீண்ட கால பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும்.

4. தேசிய மீட்புப்படை (NDRF) போல் இந்தாண்டு முதல் தமிழ் நாட்டிலும் புதிதாக 1000 பேரைக் கொண்டு தமிழ்நாடு பேரிடர் மீட்புப்படை (TNDRF) ஒன்று உருவாக்கப்படும் என்று சட்டமன்றத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. பருவ மழை தொடங்கும் முன்பே, இப்படை விரைவில் உருவாக்கிட உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

5. கடலோர மாவட்டங்கள் மற்றும் மலை பகுதிகளில் உள்ள வருவாய் கோட்ட அலுவலகங்களில் ரூ.28 லட்சம் செலவில் நவீன தொழில் நுட்பம் மற்றும் திறன் மேம்பாட்டுடன் அவசர கட்டுப்பாட்டு அறைகள் உருவாக்க வேண்டும்.

6. மாநில அவசர கட்டுப்பாட்டு மையம், அனைத்து மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையங்களுடன் காணொலி காட்சி மூலம் இணைக்கப்படும். இவ்வசதிகள் விரைவில் நிறுவப்பட வேண்டும்.

7. மீட்புப் பணிகளில் ஈடுபடும் பல்வேறு துறைகளின் திறன் மேம்பாட்டிற்காகவும், மீட்பு மற்றும் தகவல் தொடர்பு பணிகளை மேம்படுத்துவதற்காகவும் அதி நவீன நீர் உறிஞ்சி மற்றும் நீர் மறுசுழற்சி கருவி, நடமாடும் ஜெனரேட்டருடன் கூடிய உயர் கோபுர விளக்கு, அதி நவீன உறிஞ்சிகள் உள்ளிட்ட பல்வேறு

உபகரணங்கள் வாங்குவதற்கு 52.40 கோடி ரூபாய் மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் இந்த ஆண்டு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

8. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, வெள்ளக் காலங்களில் கூடுதல் நீரை சேமித்திடவும், வெள்ள அபாயத்தை குறைத்திடவும், விவசாய நிலங்களின் வளத்தை செழிப்படைய செய்வதற்காகவும், இதுவரை தமிழ்நாடு முழுவதும் 33,212 பல்வேறு வகையான நீர்நிலைகளில் தூர்வாரும் பணிகள் தொடங்கப்பட்டு 5 கோடியே 51 இலட்சத்து 8167 கன மீட்டர் அளவிலான வண்டல் மண் அள்ளப்பட்டு 6 இலட்சம் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழகத்தில் உள்ள நீர்நிலைகளில் கூடுதலாக சுமார் 1.6 டி.எம்.சி தண்ணீர் தேக்கி வைக்கலாம்.

9. வடகிழக்கு பருவமழை காலங்களில் சாலை ஓரங்களில் தண்ணீர் தேங்குவதை தவிர்க்க 1137 கி.மீ மழைநீர் வடிகால்கள் ரூ.10.60 கோடி செலவில் பெருநகர சென்னை மாநகராட்சியால் தூர்வாரப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் கட்டும் திட்டத்தின் கீழ் 294 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால்கள் கட்டி முடிக்கப்பட்டு அவைகளிலிருந்து இணைப்பு கால்வாய்களில் முறையாக இணைக்கப்பட்டு மழைநீர் செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், 376 கி.மீ நீளத்திற்கு சென்னை மாநகரில் மழைநீர் வடிகால் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை விரைவில் முடிக்க வேண்டும்.

10. ‘‘பேரிடர் அபாய குறைப்பு தினம்’’ உலகம் முழுவதும் அக்டோபர் 13–ம் தேதி கடைப்பிடிப்பதையொட்டி தமிழ்நாடு முழுவதும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பேரிடர் மேலாண்மை தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கம் மற்றும் பேரிடர் ஒத்திகை போன்றவை நடத்தப்பட வேண்டும்.

மேலும், வடகிழக்கு பருவ மழை பணிகளை கண்காணிப்பதற்காக மாவட்ட அளவில் கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதன் விவரம் வருமாறு:

| மாவட்டம் | கண்காணிப்பு அலுவலர் |
|---|---|
| அரியலூர் | திரு.க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., |
| பெரம்பலூர் | திரு. அபூர்வ வர்மா, இ.ஆ.ப., |
| கோயம்புத்தூர் | திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., |
| நீலகிரி | திரு.சந்திரகாந்த் பி. காம்ப்ளே, இ.ஆ.ப., |
| கடலூர் | திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., |
| தருமபுரி | டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., |
| திண்டுக்கல் | திரு.மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., |
| ஈரோடு | திரு.டி. உதயச்சந்திரன், இ.ஆ.ப., |

| | |
|---|---|
| காஞ்சிபுரம் | திருமதி பி. அமுதா, இ.ஆ.ப., |
| கன்னியாகுமரி | திரு.டி.கே. ராமச்சந்திரன், இ.ஆ.ப., |
| கரூர் | திரு.பி. அண்ணாமலை, இ.ஆ.ப., |
| திருச்சிராப்பள்ளி | டாக்டர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., |
| கிருஷ்ணகிரி | திரு.ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., |
| மதுரை | திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., |
| புதுக்கோட்டை | திரு.சாம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., |
| தஞ்சாவூர் | திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., |
| நாமக்கல் | திரு.விக்ரம் கபூர், இ.ஆ.ப., |
| சேலம் | திரு.முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., |
| விருதுநகர் | திரு.எஸ். கிருஷ்ணன், இ.ஆ.ப., |
| தூத்துக்குடி | திரு.குமார் ஜெயந்த், இ.ஆ.ப., |
| நாகப்பட்டினம் | திரு.சுனில் பாலீவால், இ.ஆ.ப., |
| இராமநாதபுரம் | டாக்டர் பி. சந்திர மோகன், இ.ஆ.ப., |
| சிவகங்கை | திருமதி பி. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., |
| திருவாரூர் | டாக்டர் கே. மணிவாசன், இ.ஆ.ப., |
| தேனி | திரு.ஏ. கார்த்திக், இ.ஆ.ப., |
| திருவண்ணாமலை | திரு. தீரஜ் குமார், இ.ஆ.ப., |
| திருநெல்வேலி | டாக்டர் ராஜேந்திரகுமார், இ.ஆ.ப., |
| திருப்பூர் | டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., |
| திருவள்ளூர் | திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., |
| வேலூர் | திரு.பி.டபிள்யு.சி. டேவிதார், இ.ஆ.ப., |
| விழுப்புரம் | திரு.அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., |

மேற்காணும் கண்காணிப்பு அலுவலர்கள் வட கிழக்கு பருவ மழை முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும்பொழுது, மாவட்டங்களில் டெங்கு தடுப்பு பணிகளையும் தீவிரமாக ஆய்வு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, மாண்புமிகு

வருவாய்த் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.P.W.C. டேவிதார், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் முனைவர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., பொதுப் பணித் துறை முதன்மைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் எம். சாய்குமார், இ.ஆ.ப., வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு.ககன் தீப் சிங் பேடி, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு.டி.கே. ராஜேந்திரன், இ.கா.ப., பேரிடர் மேலாண்மை ஆணையர் திரு. ராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப., தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் திரு. கே.பி. மகேந்திரன், இ.கா.ப., டாக்டர் திருமலைவாசன், அண்ணா பல்கலைக்கழகம், திரு ராமமூர்த்தி, இந்திய தொழில் நுட்ப கழகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 9.10.2017**